மணி 13 இதழ் 235 NAVAMANI (Tamil Daily) MADRAS 4 பக்கம் 15 காசு விமானப் பதிப்பு 18 காசு
REGD NO M 7897 Phone No. 76190—76199

மத்திய அரசை எதிர்த்து விலைவாசி கிளர்ச்சி
—2-ம் பக்கம்

நவமணி

கூட்டுறவு முறையில் தொழிலாளர்கள் நடத்தும் ஒரே தமிழ்த் தினசரி

சென்னை 6-6-73 புதன் வெளியீடு 7-6-73 வியாழன்

மாறன்மீது அ. தி. மு. க. எம். பி. போட்ட வழக்கு தள்ளுபடி

சென்னை, ஜூன் 6—எம். ஜி. ஆரைக் கொலை செய்யத் தூண்டும் வகையில் கட்டுரை வெளியிட்டதாக முரசொலி ஆசிரியர் மாறன் மீதும் அக்கட்டுரை ஆசிரியர் முரசொலி அடியார் மீதும் தொடரப்பட்ட வழக்கு இன்று சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த வழக்கை அண்ணா தி. மு. க. கொள்கை பரப்பு பொறுப்பாளர் எஸ். டி. சோமசுந்தரம் எம். பி. தொடர்ந்திருந்தார்.

"அக்கட்டுரை அண்ணா தி.மு.க. தலைவரான எம். ஜி. ஆரைக் கொலை செய்யத் தூண்டும் வகையில் உள்ளது" என்று எஸ்.டி. சோமசுந்தரம் தனது வழக்கு மனுவில் கூறியிருந்தார்.

பிரதம மாகாண மாஜிஸ்திரேட் சிதம்பரம் இந்த வழக்கை விசாரித்து தீர்ப்பளிக்கையில் "இக்கட்டுரையில் கொலை செய்யத் தூண்டும் நோக்கம் எதுவும் இல்லை" என்று தீர்ப்பளித்து வழக்கை தள்ளுபடி செய்தார்.



முதலமைச்சர் கருணாநிதி 50 வது பிறந்த நாளின் போது "நவமணி" பிரதம ஆசிரியர் எஸ். வி. ஜி. சௌரிராஜுலுவும், ஓவியர் டி. கேசவனும் வாழ்த்து மடல் அளிக்கும் காட்சி.

ஜனசங்க தலைவருக்கு விஷமிட சதி

உஜ்ஜயினி, ஜூன் 6—ஜனசங்க கட்சித் தலைவர் அத்வானிக்கு அளிக்கப்பட்ட விருந்தின் போது அவருக்கு அருகில் போய் உட்கார்ந்து அவருடைய உணவில் விஷத்தைக் கலக்க முயற்சித்ததாக இளைஞர் ஒருவரைப் போலீசார் கைது செய்துள்ளனர். அந்த இளைஞரிடமிருந்து இரு பொட்டலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அப்பொட்டலங்களில் அடங்கிய பொருட்கள் ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. அந்த இளைஞரின் பெயர் வீர் சிங் என்று கூறப்படுகிறது.

அத்வானிக்கு உள்ளூர் ஜனசங்கத் தலைவர் ஒருவர் விருந்தளித்தார். அப்போது வீர்சிங் அத்வானியின் அருகே உள்ள ஆசனத்தில் வந்து உட்கார்ந்துகொண்டார். அவருக்கு சந்தேகம் ஏற்படவே அந்த இளைஞரை விசாரித்தார். அத்வானியுடன் கூடவந்ததாகவும், தான் மத்தியப் பிரதேச எம். எல். ஏ. என்றும் அந்த இளைஞர் கூறினார்.

அத்வானியோ அந்த இளைஞரைத் தனக்குத் தெரியாது என்றார். உடனே போலீசார் வரவழைக்கப்பட்டு அந்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

அஸ்ஸாமில்

ஆசிரியர் கிளர்ச்சி: போலீஸ் தடியடி

ஷில்லாங், ஜூன் 6— அஸ்ஸாமில் தங்கள் கோரிக்கைகளுக்காக இன்று கிளர்ச்சியைத் துவங்கிய ஆசிரியர்கள் மீது போலீசார் தடியடி நடத்தினர்.

தேஜபூரில் அஸ்ஸாம் மாநிலச் சட்டசபைக் கூட்டம் இன்று நடந்தபோது வெளியே ஆசிரியர்கள் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது போலீசார் தடியடி நடத்தினர்.

இக்கிளர்ச்சி குறித்து ஆளுங்கட்சியின் போக்கைக் கண்டித்து சட்டசபையிலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர் அனைவரும் வெளி நடப்பு செய்தனர்.

பி. யு. சி. முடிவுகள்

சென்னை, ஜூன் 6—சென்னை பல்கலைக் கழக பி. யு. சி. பரிட்சை முடிவுகள் வருகிற 9-ந்தேதி வெளியிடப்படும் என்று சென்னை பல்கலைக் கழகம் இன்று அறிவித்தது.



'ஏர் இண்டியா' வெள்ளி விழா நினைவு அஞ்சல் தலை

புதுடெல்லி, ஜூன் 6—"ஏர் இண்டியா"வின் கடல் கடந்த போக்கு வரத்துத் தொடங்கி 20 ஆண்டுகள் நிறைவு பெறுவது யொட்டி: தபால், தந்தி இலாகா நினைவு அஞ்சல் தலையொன்றை வெளியிடவிருக்கிறது. இந்த அஞ்சல் தலை வரும் 8-ந் தேதி அன்று வெளியிடப்படும் அதன் விலை 1.45 ரூபாய்.

பல வண்ணங்களில் வெளிவரும் இந்த அஞ்சல் தலையில் "ஏர் இண்டியா" போயிங்—747 படம் அச்சிடப்பட்டிருக்கும்.

முதல் நாள் உறைகளும், துணைப் பிரச்சாரங்களும் வெளியிடப்படும். ஆங்காங்குள்ள தபால்தலை சேகரிப்பு ஸ்தாபனங்களிலும், தெரிந்தெடுத்த அலுவலகங்கள் சிலவற்றிலும் இவை விலைக்குக் கிடைக்கும்.

உலக கோர்ட்டில் பாகிஸ்தான் வழக்கு தள்ளிவைப்பு

புதுடெல்லி, ஜூன் 6—பாகிஸ்தான் போர்க் கைதிகள் 195 பேரை விசாரணைக்காக வங்காளதேஷிடம் இந்தியா ஒப்படைக்க இருப்பதைத் தடுக்கவேண்டும் என்று கோரி உலக கோர்ட்டில் பாகிஸ்தான் கொடுத்துள்ள வழக்கு விசாரணை ஒரு வாரத்துக்கு தள்ளிப்போடப்பட்டுள்ளது.

இந்தியா உலக கோர்ட்டின் விசாரணையில் பங்கு கொள்ள பிரதிநிதி யாரையும் அனுப்பவில்லை. கடிதம் ஒன்றைத்தான் அனுப்பியுள்ளது.

லண்டனில் தங்கம் விலை உயர்வு

லண்டன், ஜூன் 6—லண்டன் மார்க்கெட்டில் ஓர் அவுன்ஸ் தங்கத்தின் விலை நேற்று இதுவரை இல்லாத வகையில் 130 டாலரை எட்டியது. எனினும் நேற்று மாலையில் அது 116 டாலராக குறைந்தது.

முதலீட்டாளர்கள் டாலர் கையிருப்பைத் தங்கமாகவும், வேறுகரன்சிகளாகவும்மாற்ற முற்பட்டபோது ஐரோப்பிய அன்னியச் செலாவணி மார்க்கெட்டில் ஒரே குழப்பம் நிலவியது.

ஐரோப்பிய நகர்களிலும் டோக்கியோவிலும் டாலர் மீதான மதிப்பு விழுந்ததே இதற்குக் காரணமாகும்.

பருவ மழை ஆரம்பம்

திருவனந்தபுரம், ஜூன். 6—கேரளாவின் தென்பகுதியில் பருவமழை துவங்கி விட்டது.

இதன் பலனாக திருவனந்தபுரம் நகரில் 3 அங்குல மழை பெய்தது. புனலூரில் இரண்டு அங்குல மழை பெய்தது.

பருவமழை கேரளாவின் வடக்குப் பகுதிக்கும் பரவி வருகிறது. அடுத்த 24 மணி நேரத்தில் பலத்த மழை பெய்யும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

தமிழக கவர்னர் டெல்லி பயணம்

சென்னை, ஜூன் 6—தமிழக கவர்னர் கே. கே. ஷா இன்று மாலை டெல்லிக்குப் புறப்படுகிறார்.

டெல்லியிலிருந்து சென்னை திரும்புவதற்கு முன்னர் அவர் ஆமதாபாத் பரோடா ஹைதராபாத், பம்பாய், பெங்களூர், மைசூர் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வார். இம் மாதக் கடைசி வாரத்தில் அவர் சென்னை திரும்புவார்.

பாலதண்டாயுதம் அஸ்தி கோவை செல்லுகிறது

சென்னை, ஜூலை 6—டெல்லியில் நிகழ்ந்த விமான விபத்தில் உயிரிழந்த வலது கம்யூனிஸ்ட் தலைவர் கே. பாலதண்டாயுதம் எம். பி. யின் அஸ்தி சென்னைக்குக் கொண்டுவரப்பட்டது.

பாலதண்டாயுதத்தின் சகோதரர் கே. கண்ணன் அஸ்தியைக் கொண்டுவந்தார். விமான நிலையத்தில் வலது கம்யூனிஸ்ட் தலைவர்களான எம். கல்யாணசுந்தரம், எஸ். ஏ. முருகானந்தம் மற்றும் பலர் வந்திருந்தனர்.

வலது கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்துக்கு அஸ்தி எடுத்துச் செல்லப்பட்டது.

இன்று பகல் 12-30 மணிக்குப்புறப்படும் வெஸ்ட் கோஸ்ட் எக்ஸ்பிரசில் ஒரு விசேஷ பெட்டியில் அஸ்தி கோவைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும்.

சினிமா செய்திகள்

4-ம் பக்கம்

இந்திய - ஆஸ்திரேலிய பிரதமர்கள் கூட்டறிக்கை

புதுடெல்லி, ஜூன் 6—இந்துமகா சமுத்திரத்தை அமைதி மண்டலமாக்குவதில் பரஸ்பர அடிப்படையிலும், சம்பந்தப்பட்ட நாடுகளுடனும் ஒத்துழைப்பது என்று இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் ஒப்புக்கொண்டுள்ளன.

டெல்லியில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் ஆஸ்திரேலியப் பிரதமர் விட்லாமும் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து இரு பிரதமர்களும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வித மண்டலத்தை உருவாக்குவதானது இப்பிராந்தியத்தில் போட்டா போட்டியையும் நெருக்கடிகளையும் தணிக்க உருப்படியான நடவடிக்கையாக இருக்கும் என்று இரு பிரதமர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகள் இடையிலான ஒத்துழைப்பை இரு பிரதமர்களும் தங்கள் கூட்டறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியா — வங்காளதேஷ் இடையிலான நட்புறவு ஒப்பந்தத்தை ஆஸ்திரேலியப் பிரதமர் வரவேற்றதாக அக் கூட்டறிக்கை தெரிவித்தது.

எந்த நாடும் அணு ஆயுதங்களை குறிப்பாக வானில் வெடித்துப் பரிசோதிப்பது கூடாது என்று இரு பிரதமர்களும் தங்கள் கூட்டறிக்கையில் எதிர்ப்புத் தெரிவித்தனர்;

7-ந் தேதி முஸ்லிம் லீக் தலைவர் தேர்தல்

சென்னை, ஜூன் 6—இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக அதன் செயற்குழு இந்த மாதம் 7, 8 தேதிகளில் சென்னையில் கூடும்.

முஸ்லிம் லீகின் தலைவராக இருந்த தங்கள், சமீபத்தில் மெக்காவில் மரணம் அடைந்தார். ஆகவே புதிய தலைவருக்கான தேர்தல் நடக்கவிருக்கிறது: நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த செயற்குழு உறுப்பினர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

தமிழகத்துக்கு

மேலும் கேரள மின்சாரம்

திருவனந்தபுரம்: ஜூன் 6—கேரளா நாளையிலிருந்து தமிழகத்துக்கு நாள் தோறும் அதிகப்படியாக 2 லட்சம் யூனிட் மின்சாரம் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது கேரளா தினமும் 5 லட்சம் யூனிட் மின்சாரம் வழங்கி வருகிறது. இது யூனிட் ஒன்று ஆறேகால் பைசா வீதம் விற்கப்படுகிறது. அதிகப்படி மின்சாரத்துக்கு யூனிட் ஒன்றுக்கு 9 பைசா [illegible] வேண்டும் என்று கேரளா கேட்டுள்ளது.

3 மணி நேரத்தில் 6 அங்குல மழை

கோழிக்கோடு, ஜூன் 6—கேரளாவின் கோழிக்கோடு நகரில் இன்று காலை 11-03 மணி வரையிலான மூன்று மணி நேரத்தில் 6 அங்குலம் மழை பெய்தது: கடந்த 48 மணி நேரத்தில் 17 அங்குலமழைபெய்துள்ளது

கேரளாவின் கரையோரப் பகுதிகளில் பருவமழை தீவிரமடைந்துள்ளது.

பல்லவன் ஊழியர் உண்ணாவிரதம்

சென்னை, ஜூலை 6—அயனாவரம் பல்லவன் போக்குவரத்துக் கழக பணிமனை ஊழியர் நிர்வாகிகள் தேர்தலில் ஒழுங்கீனங்கள் நடந்திருப்பதாகவும் எனவே மறு தேர்தல் நடத்த வேண்டும் என்றும் கோரி அயனாவரம் பணிமனைமுன்பாக இன்று இரண்டாவது நாளாகத் தொடர் உண்ணாவிரதம் நடந்தது.

இன்றைய உண்ணாவிரதத்தில் ராமச்சந்திரன் தலைமையில் 4 பேர் பங்கு கொண்டனர்.

ஊழல் புகார் விசாரணை

"தி. மு. க. அரசே ஏற்பாடு செய்யவேண்டும்": பி. ராமமூர்த்தி யோசனை

தஞ்சாவூர், ஜூன் 6—"ஊழல் புகார் [illegible] யலை தி. மு. க. அரசாங்கமே சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவருக்கு நீதி விசாரணைக்காக அனுப்பிவைக்கவேண்டும்" என்று மார்க்சிஸ்ட் தலைவரான பி. ராமமூர்த்தி யோசனை கூறியுள்ளார்.

"ஏனெனில் விசாரணைக் கமிஷன் அமைக்க மத்திய அரசு எடுக்கிற எந்த முடிவும் அரசியல் அம்சம் கலந்ததாக இருக்கும்" என்றும் ராமமூர்த்தி கூறினார்.

மாயவரத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அவர் இந்த யோசனையைத் தெரிவித்தார்.

அவர் பேசுகையில் கூறியதாவது:

இந்த ஊழல் புகார்கள் குறித்து நீதிவிசாரணைநடத்த மத்திய அரசு எடுக்கக்கூடிய எந்த முடிவும் அரசியல் நோக்கம் கொண்டதாக ஆகிவிடும். தவிர மத்திய அரசாங்கமே இது போன்ற ஊழல் புகார்கள் குறித்து நீதி விசாரணையை எதிர்ப்பட்டாக வேண்டியுள்ளது.

எனவே திமுக அரசுமீது கூறப்பட்டுள்ள ஊழல் புகார்கள் பற்றி நீதிவிசாரணை நடத்த திமுக அரசாங்கமே இந்த ஊழல் புகார் பட்டியலை சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவருக்கு அனுப்பிவைத்து அவருடைய தீர்ப்புக்குக் கட்டுப்படவேண்டும் என்றார் ராமமூர்த்தி.

கூட்டணி பற்றி அவர் குறிப்பிட்டு தமிழ்நாட்டின் எதிர்கால தேர்தல்களுக்கு மட்டுமல்லாமல் தொழிலாளர், விவசாயிகள் ஆகியோரின் நலன்களைக் காக்க மார்க்சிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்டுகட்சி, அண்ணா தி. மு. கழகம் ஆகியவை இறைந்து கொண்ட இடதுசாரி ஜனநாயக முன்னணி ஒன்று அமைக்கப் படவேண்டும் என்றார்.

திண்டுக்கல் தேர்தல் முடிவு பற்றி அவர் குறிப்பிட்டு, "திண்டுக்கல்லில் 1971 தேர்தலில் 64 சதவிகித வாக்குகளைப் பெற்ற தி. மு. கழகம் சமீபத்திய தேர்தலில் 18 சதவிகித ஓட்டுக்களையே பெற்றது. தி.மு.க. மக்களின் ஆதரவை இழந்துவிட்டதை இது காட்டுகிறது" என்றார்.

மாணவர்களுக்கு போலீஸ் உதவி

திருவனந்தபுரம், ஜூன் 6—கல்லூரி பஸ் தடைரென்று நடுவழியில் பழுதடைந்து நின்றுவிட்டால், அவ்விதசந்தர்ப்பங்களில்மாணவர்களுக்கு போலீசார் தக்க உதவி புரிவார்கள்.

திருவனந்தபுரம் நகரில் கல்லூரி பஸ் இவ்விதம் நின்றுவிட்டால் உடனே போலீஸ் கண்ட்ரோல்அறைக்குதகவல் தெரிவிக்கவேண்டும். எந்த இடத்தில்கல்லூரி பஸ் நின்றுவிட்டதோ அந்த இடத்திற்கு உடனேபோலீஸ் [illegible] வண்டியை அனுப்பி மாணவர்களை எந்தஇடத்திற்கு அழைத்துச்செல்லவேண்டுமோ அந்த இடத்திற்கு அழைத்துச் செல்ல போலீசார் தக்க ஏற்பாடு செய்வார்கள்.

இதனால் மாணவர்கள் அதிக தாமதம் இன்றி கல்லூரிக்கு போய்ச் சேர முடியும்.

மாணவர்களுக்கும், போலீசாருக்கும் இடையே நல்லுறவை வளர்க்கும் நடவடிக்கையாக மாணவர்களுக்கு இவ்விதம் உதவி புரிய போலீஸ் அதிகாரிகள் முன்வந்திருக்கிறார்கள்.

நவமணி
தனிப் பிரதி 15 காசு வார மலர் 18 காசு
15—11—1971 முதல்
சந்தா விபரம்

	உள்ளூர் மற்றும் ஏஜண்டு மூலமாக ரூ.	தபால் மூலமாக ரூ.
ஒரு மாதம்	4-70	5-25
3 மாதம்	14-00	15-50
6 மாதம்	28-00	31-00
ஒரு வருடம்	56-00	62-00

நவமணி

(6—6—73) புதன்கிழமை (7—6—73)

குற மாணவர் குடில்

முதல்வர் திரு கருணாநிதி பிறந்த நாள் காணிக்கையாக சீரணிப் படையினர், குற மாணவர் தங்கிப் படிக்க வசதியாக ஒரு குடிலை அமைத்துத் தந்துள்ளதைப் பாராட்டுகிறோம்.

சீரணி சென்னையில் செய்துள்ள தொண்டுகளில் இது காலச்சிறப்பானது.

நாடோடிகளாக அன்றாட உணவிற்கே எச்சில் இலைகளையும் திருமண வீடுகளையும் தேடிச் செல்லும் சமுதாயத்தை மாற்றி அமைக்க வேண்டுமெனில் அந்த சமூக குழந்தைகள் கல்வி கற்கவும், கற்றபின் தக்கதொரு தொழிலைச் செய்யவும் வாய்ப்பையும் வசதியையும் ஏற்படுத்துவதுதான் சரியான முறையாகும்.

இதை நன்குணர்ந்து, குறவர் மக்களின் நாடோடித் தன்மையை உணர்ந்து, அவர்களின் குழந்தைகள் படிக்க வேண்டுமெனில், அவர்கள் தங்கி, படிக்க குடில் தேவை என அறிந்து அதற்காக உழைத்து, குடிலை ஏற்படுத்திய சீரணியையும் அதற்குக் காரணமாயிருந்த அதின் பொறுப்பாளர்களையும் பாராட்டுகிறோம்.

நாடோடி மக்களின் குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை, புத்தகங்கள் போன்ற இதர வசதிகளையும் செய்திருப்பார்கள் என நம்புகிறோம். இந்தக் குடில் அமைத்ததில் இந்தியாவிற்கே தமிழ்நாடு முதன்மையாக நடந்திருக்கும் என எண்ணுகிறோம்.

நாடோடி மக்கள் சில ஆயிரக்கணக்கில் தான் இருக்கிறார்கள் என்ற காரணம்பற்றி இவ்வாறு அவர்களின் குழந்தைகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் தங்கிப் படிக்க அமைப்புகளை ஏற்படுத்தி அக்குழந்தைகளைக் கட்டாயமாக இங்கு அனுப்ப அரசாங்கம் ஒரு திட்டத்தை தீட்டி நிறைவேற்றினால் அடுத்த பத்து ஆண்டுகளில் இந்த நாடோடி சமூகம் முழுவதும் நாகரிக சமூகமாக மாறிவிடும் என நம்புகிறோம்.

நேரு பற்றிய புத்தகம்: வாபஸ் பெறுமாறு லீக் வற்புறுத்தல்

கோழிக்கோடு; ஜூன் 6—கேரளப் பள்ளிகளில் பாடப் புத்தகமாக வைக்கப்பட்டிருக்கும் நேருவின் வாழ்க்கை வரலாறுபற்றிய ஒரு புத்தகத்தை உடனடியாக வாபஸ் பெறுமாறு கேரள முஸ்லிம் லீக் வற்புறுத்தியிருக்கிறது.

மு. கோவிந்தபிள்ளை என்பவரால் எழுதப்பட்ட இந்தப் புத்தகத்தில் முஸ்லிம் லீகைப் பற்றி பல ஆட்சேபகரமான கருத்துக்கள் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தப் புத்தகத்தை வாபஸ் பெறுமாறு, முஸ்லிம் லீக் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

கேரளத்தில் கல்வி அமைச்சராக இருப்பவர், முஸ்லிம் லீகைச் சேர்ந்த சி. அகமது குட்டி முஸ்லிம் லீகின் தீர்மானம் அவருக்கு ஒரு பிரச்னையை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த ஆண்டே இந்தப் புத்தகம் பள்ளிகளில் வைக்கப்பட்டிருந்தது. அப்போதும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அப்போது கல்வி அமைச்சராக இருந்த முகமது கோயா, ஆட்சேபகரமான பகுதிகள் அந்தப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும் என்று உறுதி கூறியிருந்தார். ஆயினும், அந்தப் புத்தகம் இந்த ஆண்டும் பள்ளிகளில் இடம் பெற்றிருப்பதாக, லீக் குற்றஞ்சாட்டியது.

கிளர்ச்சி

முஸ்லிம் லீகின் மாணவர் பிரிவு, இந்தப் புத்தகத்தை வாபஸ் பெறவில்லையென்றால் நேரடிக் கிளர்ச்சியில் ஈடுபடுவதாக எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

இப்பிரச்சினையை இவ்வளவு கடுமையானதாகக் கருதுவதற்கு முஸ்லிம் லீகில் உள்ள கோஷ்டி மனப்பான்மையும் காரணமாகும் என்று கூறப்படுகிறது.

இப்புத்தகத்தில் முஸ்லிம் லீக் ஒரு வகுப்புவாதக் கட்சி என்றும், அதற்கு காலஞ்சென்ற ஜின்னாவே காரணம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மோகன் இலாகா: இந்திரா ஏற்றார்

புதுடெல்லி, ஜூன் 6—காலஞ்சென்ற மோகன் குமாரமங்கலம் கவனித்து வந்த உருக்கு, சுரங்க இலாகாவை பிரதமர் இந்திரா காந்தியே தற்காலிகமாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த இலாகாவுக்கு நிரந்தரமாக ஒரு மந்திரி நியமிக்கப்படும்வரையில் பிரதமர் இந்திராவின் மேற்பார்வையின்கீழ் ராஜாங்க மந்திரி ஒருவர் இந்த இலாகா குறித்த வேலைகளை கவனிப்பார் என்று தெரிகிறது.

பிரதமர் இந்திரா காந்தி இம் மாத மத்தியில் யுகோஸ்லாவியா, கனடா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்கிறார். அவர் நாடு திரும்பிய பின்னரே புதிய மந்திரி நியமிக்கப்படுவார் என்று கருதப்படுகிறது.

நானைய நிகழ்ச்சி

பாலதண்டாயுதம் நினைவு அஞ்சல் சர்வ கட்சி பொதுக் கூட்டம். தலைமை: ஜி. கண்ணப்பன். பேசுவோர்: ஏ. எஸ். கே., நாஞ்சில் கி. மனோகரன், ப. சிதம்பரம், எஸ். ஜி. விநாயக மூர்த்தி. இடம்: அருணாசலஸ்வரர் கோவில் திடல், புதுவண்ணை மாலை 7 மணி.

போனஸ் அவசரசட்டத்தை இயற்ற மத்திய அரசுக்கு ஐ.என்.டி.யூ.சி. கோரிக்கை

பம்பாய், ஜூன் 6—போனஸ் அவசர சட்டத்தை இயற்ற மத்திய அரசு உடனே முன்வரவேண்டும் என்று இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் கோரியுள்ளது.

பம்பாயில் நேற்று நடந்த இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இதுசம்பந்தமாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு மாத சம்பளம் (8.33 சதவிகிதம்) போனசாக வழங்கப்பட வேண்டும் என்று தொழிலதிபர்களைக் கட்டாயப் படுத்துவதற்காக உடனே போனஸ் அவசர சட்டத்தை இயற்ற வேண்டியது அவசியம் என்று தீர்மானம் தெரிவித்தது.

போனஸ் பரிசீலனைக் கமிட்டி அதன் சிபாரிசுகளைத் தாக்கல் செய்த பிறகு, போனஸ் பட்டுவாடா சட்டம் தகுந்தபடி திருத்தப்படும் வரை இந்த அவசர சட்டம் அமுலில் இருக்க வேண்டும் என்று விவாதத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

கிராச்சுட்டி பிரச்னை பற்றியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் தலைவர் பி. பகவதி தலைமை வகித்தார்.

பாகிஸ்தானில் பூட்டோவை கண்டித்து துக்க நாள்

புதுடெல்லி, ஜூன் 6—பூட்டோ கட்சியினர் நடத்திய அட்டூழியத்தைக் கண்டித்து பாகிஸ்தானில் துக்க நாள் கொண்டாடப்பட இருக்கிறது.

பாகிஸ்தான் ஐக்கிய ஜனநாயக முன்னணி சார்பில் பஞ்சாபில் நடைபெற்ற கூட்டத்தில் பூட்டோ கட்சியினர் புகுந்து கலகம்விளைவித்தனர். இதைக் கண்டிக்கும் வகையில் வருகிற 8-ந் தேதி துக்கநாள் கொண்டாடும்படி ஐக்கிய ஜனநாயக முன்னணி கேட்டுக் கொண்டுள்ளது.

ஐக்கிய ஜனநாயக முன்னணியின் பொதுக்கூட்டம் லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற இருந்தது. பூட்டோ கட்சியினர் கலகம் விளைவித்ததால் அந்த கூட்டம் நடைபெறமுடியாமல் போய்விட்டது. போலீசுக்கும் கலககும்பலுக்குமிடையே ஏற்பட்ட மோதலின் விளைவாக இந்த கூட்டம் நடைபெற முடியாமல் போய்விட்டது என்று பிரிட்டிஷ் வானொலி கூறியது.

எதிர்க்கட்சிகளை மிரட்டி அடக்கி ஒடுக்கும் நோக்கத்துடன், ஒரு கூட்டத்தை ஏவிவிட்டிருப்பதாக பூட்டோ மீது ஐக்கிய ஜனநாயக முன்னணி குற்றஞ்சாட்டியது.

இந்த முன்னணியின் போராட்டக்குழுக் கூட்டம் நாளை ராவல்பிண்டியில் கூடி, போராட்டத் திட்டங்களை வகுக்கும்.

போலீசாரும், பாதுகாப்பு படையினரும் லாகூருக்கு முன்கூட்டியே சென்று, அங்கு சட்ட விரோதமான ஆயுதங்கள் யாரிடமாவது உள்ளதா என்று சோதனை நடத்தினர். மாநாடு நடைபெற இருந்த திடலைச் சுற்றி வளைத்துக் கொண்டனர்; திடலை நோக்கி செல்லும் வழிகளையெல்லாம் காவல்காத்து நின்றனர்.

கடந்த 4 நாட்களில் இரண்டாவது தடவையாய் நடத்த முடியாமல் ரத்து செய்யப்பட்ட கூட்டம் ஆகும் இது. கடந்த வெள்ளிக்கிழமையன்று மூல்தானில் ஐக்கிய ஜனநாயக முன்னணி சார்பில் ஒரு கூட்டம் நடைபெற இருந்தது. அந்தக் கூட்டத்துக்கு வந்த மக்கள் தாக்கப்பட்டனர், சோதனைக்கு ஆளாயினர்.

இந்த இரண்டு கூட்டங்களுக்கும் முறையாக அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருந்ததாக பிரிட்டிஷ் வானொலி கூறியது.

பல்வேறு பகுதிகளிலிருந்தும் லாகூர் கூட்டத்துக்கு வந்துசேர்ந்த முன்னணித் தலைவர்களெல்லாம் சோதனை போடப்பட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கூடினர். போலீசார் கண்ணீர் புகை பிரயோகித்து கூட்டத்தை கலைத்தனர்.

இந்த சம்பவம் பற்றி பாகிஸ்தான் வானொலியில் இன்று அறிவிக்கையில், ஒரு நூறு பேர்கள் கூடியிருந்தனர். கண்ணீர்ப் புகைக் குண்டு எதுவும் வீசவில்லை என்று கூறியது.

தங்கள் தலைவர்களை வரவேற்க எதிர்க்கட்சியினர் வெடிகளை வெடித்தனர் என்றும், தலைவர்களைக் கூட்டத்திற்கிடையே பத்திரமாக போலீசார் அழைத்து வந்ததாகவும் இது அச்சுறுத்தும் வகையில் அமைந்துவிட்டது என்றும் பாகிஸ்தான் வானொலி கூறியது.

சிந்து மாநிலத்தில் பல்வேறு பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டதாக பிரிட்டிஷ் வானொலி கூறியது.

சென்னை மார்க்கெட்

சென்னை, ஜூன் 6—

தங்கம்

(24 காரட்) சுத்த தங்கம் 10 கிராம் ரூ. 337 50
(22 காரட்) சில்லரை 1 கிராம் ரூ. 32 25
(14 காரட்) சில்லரை 1 கிராம் ரூ. 20 00

வெள்ளி

பார் வெள்ளி (1 கி. கி.) ரூ. 658 00
உள்ளூர் வெள்ளி ரூ. 655 00
வெள்ளி 10 கிராம்) ரூ. 6 70

மணிலாப்பயறு

மாரிகால பட்டாணி 80 கி. கி. ரூ. 685 00

மணிலா எண்ணெய்

மொத்த விலை ரூ. 680 00
சில்லரை விலை ரூ. 7 50

விளக்கெண்ணெய்

100 கி. கி.) சென்னை கிடங்கு) டெலிவரி திருப்பத்தூர் மொத்த விலை ரூ. 640 00
சேலம் தாமரை அன்னம் மார்க் (16 05கி.கி.) ரூ 100 00

தேங்காய் எண்ணெய்

(16,06 கி.கி.) டின் எம். எஸ். மார்க் ரூ. 133 50 முதல் ரூ. 134 00

நல்லெண்ணெய்

17 கி. கொண்ட டின் 1-க்கு (அக்மார்க் குருபரன் மார்க்) ரூ. 119 00
விற்பனை வரி தனி
சில்லரை கிலோ 1-க்கு) ரூ. 7 75

கடலைப்பிண்ணாக்கு

கி. கி. கொண்ட மூட்டைக்கு 70 எக்ஸ்பெல்லர் ரூ. 104 00

சர்க்கரை

பகிரங்க மார்க்கெட் விலை 100 கி.கி. ரூ. 385 00 முதல் ரூ. 386 00

'நீலகிரி' கப்பலின் முதல் பிறந்தநாள்

புதுடெல்லி, ஜூன் 6—இந்தியக் கடற்படையைச் சேர்ந்த "நீலகிரி" சென்ற 3-ஆம் தேதியன்று கடலில் தன் முதல் பிறந்தநாளைக் கொண்டாடியது. போர்ட் பிளேரிலிருந்து சென்ற சனிக்கிழமை புறப்பட்ட "ஐ. என். எஸ். நீலகிரி" ஜகார்த்தா சென்று கொண்டிருக்கிறது. அது நாளை ஜகார்த்தாவை அடையும்.

முதன் முதலாக இந்தியாவில் கட்டப்பட்ட 'லியாண்டர்' ரகப் போர்க் கப்பலான "நீலகிரி"யின் அதிகாரிகளும், கப்பலில் பணிபுரியும் மற்றவர்களும் கப்பலின் ஹெலிகாப்டர் தளததில் பாட்டு, விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி விழாவைக் கொண்டாடினர்.

"ஐ. என். எஸ். நீலகிரி" தற்போது இந்தோனேஷியா தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு நல்லுறவுப்பயணத்தை மேற்கொண்டுள்ளது.

போர்க்கப்பல் "நீலகிரி" 1972 ஜூன் 3-ஆம் தேதி இந்திய கடற்படையில் பணியாற்றத் தொடங்கியது. பிரதமர் இந்திரா காந்தி பம்பாயில் இதன் சேவையை துவக்கி வைத்தார்.

நிலக்கரி, தங்கம் உற்பத்தி அதிகரிப்பு

புதுடெல்லி, ஜூன் 6—இந்தியாவில் கடந்த மார்ச் மாதம் பிப்ரவரி மாதத்தை விட அதிக அளவு நிலக்கரி, லிக்னைட், பெட்ரோலியம் (கச்சா) ஆகியவை உற்பத்தியாயின.

நிலக்கரி உற்பத்தி 66 லட்சத்து 34 ஆயிரம் டன் அளவிலிருந்து 66 லட்சத்து 90 ஆயிரம் டன்னாக உயர்ந்தது. லிக்னைட் உற்பத்தி 2 லட்சத்து 27 ஆயிரம் டன் அளவிலிருந்து 3 லட்சத்து 33 ஆயிரம் டன்னாக அதிகரித்தது. பெட்ரோலியம் உற்பத்தியும் இந்த மார்ச் மாதம் 5 லட்சத்து 60 ஆயிரம் டன் அளவிலிருந்து 6 லட்சத்து 27 ஆயிரம் டன்னாகக் கூடியது.

பரிசீலனை மாதம் 336 கிலோகிராம் தங்கம் உற்பத்தி செய்யப்பட்டது. இது பிப்ரவரி மாத உற்பத்தியை விட 19 சதவிகிதம் கூடுதலாகும்.

வைர உற்பத்தியும் 2 ஆயிரத்து 172 கேரட்டுகளிலிருந்து 2 ஆயிரத்து 818 கேரட்டுகளாக அதிகரித்தது.

1973 மார்ச் மாதம் உற்பத்தியான தாதுப் பொருட்களின் மொத்த மதிப்பு 42 கோடியே 70 லட்சம் ரூபாய். இது பிப்ரவரி மாத உற்பத்தியைவிட 1 கோடியே 90 லட்சம் ரூபாய் கூடுதலானது.

போலீஸ் ஸ்டேஷனில் மண்ணெண்ணை விற்பனை

பெங்களூர், ஜூன் 6—பெங்களூர் நகரில் 4 போலீஸ் ஸ்டேஷன்களைத் தவிர மற்ற போலீஸ் ஸ்டேஷன்களில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படும்.

மண்ணெண்ணெய் ரேஷன் கார்டுகளைப்பெறாத குடும்பங்களுக்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாதம் 1-ந் தேதியிலிருந்து மைசூர் மாநிலத்தில் மண்ணெண்ணெய் ரேஷன் அமுலுக்கு வந்துள்ளது.

மைசூர் மாநிலத்தில் மண்ணெண்ணெய் நிலைமை அபிவிருத்தி அடைந்துள்ளது. ஒரு குடும்பத்திற்கு மாதாந்திர மண்ணெண்ணெய் ரேஷன் அளவு 8 லிட்டரிலிருந்து 10 லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கு நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் சப்ளை செய்யப்படுகிறது.

மத்திய அரசை எதிர்த்து

விலைகுறைப்பு கிளர்ச்சி: சோஷலிஸ்டு தலைவர் பெர்னாண்டஸ் பேட்டி

கோழிக்கோடு; ஜூன் 6—உணவுப் பற்றாக்குறை; விலைவாசி உயர்வு; வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவைகளைத் தீர்க்க அரசு தவறியதற்காக நாடு முழுவதும் ஒருபோராட்டம்நடத்தவேண்டியது அவசியம் என்று சோஷலிஸ்டு கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் நேற்று நிருபர்களிடையே பேசுகையில் கருத்துத் தெரிவித்தார்.

பெங்களூரில் ஜூன் 25 முதல் ஜூலை முதல் தேதி வரை நடைபெற விருக்கும் தன் கட்சியின் செயற்குழுவும் பொதுக்குழுவும் இது பற்றி முடிவெடுக்கும் என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சிகளை ஒழிக்க முயற்சி

எதிர்க்கட்சிகளை வெகு விரைவில் ஒழித்துக்கட்டுவதற்கு அரசு முயற்சிக்கிறது என்றும் பெர்னாண்டஸ் அச்சம் தெரிவித்தார். "சமீப காலமாக பிரதமர் இந்திரா காந்தியும், புது காங்கிரஸ் தலைவர் சங்கர் தயாள் சர்மாவும் எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அதற்கு எதிர்க்கட்சிகளின் மீது பழியைப் போடுகிறார்கள். இதிலிருந்து புதிய பலிகடாக்களை புது காங்கிரஸ் தேடுகிறது என்பது தெளிவு" என்று பெர்னாண்டஸ் கூறினார்.

எதிர்க்கட்சிகள் மீது தடை விதிக்கப்படும் என்றும், எதிர்க்கட்சித் தலைவர்கள் பெரும் அளவில் கைது செய்யப்படுவார்கள் என்றும், உ. பி. அசெம்பிளி தேர்தல்கள் நடத்தப்படாமல் போகும் என்றும் அவர் கூறினார்.

உ. பி. யில் மாகாண ஆயுத போலீஸ் படையினருக்கு எதிராக ராணுவத்தை கொண்டு வந்ததன் மூலம் நாட்டில் உள்நாட்டுப் போருக்குபிரதமரும் உ. பி. முதல்வரும் வழி வகுக்கிறார்கள் என்று அவர் குற்றஞ்சாட்டினார். போலீசாருக்கு தொழிற் சங்க உரிமை இருக்கக் கூடாது என்பதை தமது கட்சி ஏற்கவில்லை என்றார் அவர்.

ஆசிரியர் கிளர்ச்சி: அஸ்ஸாம் அரசு கோரிக்கை

ஷில்லாங், ஜூன் 6—நாளையிலிருந்து மேற்கொள்ள இருக்கும் கிளர்ச்சியைக் கைவிடுமாறு அஸ்ஸாம் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை அஸ்ஸாம் அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

ஆசிரியர்களின் குறைகள் பரிசீலிக்கப்படுகின்றன என்றும், செகண்டரி கல்வி போர்டில் ஆசிரியர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என்றும் அஸ்ஸாம் அரசு கூறியுள்ளது.

ஆழ்கடல் மீன் பிடி படகுகள் கட்ட திட்டம்

புதுடெல்லி, ஜூன் 6—ஆழ்கடலில் சென்று மீன் பிடிப்பதற்கான பெரிய படகுகளை கட்டுவது பற்றி மத்திய அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

இவை 23 முதல் 25மீட்டர் நீளம் கொண்டவையாகவும் 30 முதல் 35 மீட்டர் நீளம் கொண்டவையாகவும் இருக்கும்.

ரெயில் பயணிகள் வசதிக்காக

எழும்பூர்-சென்டிரல் இடையே தனி பஸ்

சென்னை, ஜூன் 6—ஜூன் 7-ந் தேதி முதல், சென்டிரல் ஸ்டேஷனுக்கும் எழும்பூர் ஸ்டேஷனுக்கும் இடையே இரண்டு பஸ்கள் விடப்படும். இரு ஸ்டேஷன்களிலும் கார்கள் நிறுத்தும் இடங்களிலிருந்து இந்த பஸ்கள் புறப்படும். ரயில் பிரயாணிகளின் மூட்டை முடிச்சுகள் பஸ்மீது ஏற்றிச் செல்லப்படும் என்று பல்லவன் போக்குவரத்துக் கழக பொது தொடர்பு அதிகாரி கூறினார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஹாமில்டன் பாலம் கீழ்ப்பாக்கம், பெரம்பூர், வள்ளுவர் நகர், மந்தவெளி, சைதாப்பேட்டை பிராட்வே வடபழனி முதலிய இடங்களிலிருந்து திருவற்றியூருக்கு விசேஷ பஸ்கள் விடப்படுகின்றன. தியாகராயநகருக்கும் ரெயில் பெட்டி தொழிற்சாலைக்குமிடையில் போகும் 47-ம் நெம்பர் பஸ் தடம் 47-ஏ தடத்துடன் (அடையாறு-ஐ. சி. எப்) இணைக்கப்பட்டிருக்கிறது.

இந்த பஸ்ஸுக்கு 47-ம் நெம்பர் தரப்பட்டுள்ளது.

மைசூருக்கு புதிய பிரதம நீதிபதி

பெங்களூர், ஜூன் 6—மைசூர் ஹைகோர்ட் நீதிபதிகளில் முதல்வரான நீதிபதி ஜி. கே. கோவிந்தபட் ஜூன் 7லிருந்து ஹைகோர்ட் பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

1970 செப். 17-ல் பிரதம நீதிபதி பொறுப்பு ஏற்ற ஏ. நாராயணபை ஜூன் 7ல் ஓய்வு பெறுகிறார்.

சி. ஐ. டி. யூ. மூன்ரும் ஆண்டு விழா

சென்னை, ஜூன் 6—இந்திய தொழிற்சங்க மையத்தின் (சி. ஐ. டி. யூ.) மூன்ரும் ஆண்டு நிறைவு தின விழா [illegible] பவர்ஹவுஸ் நிலைக்கம் [illegible] சார்பில் சென்னை [illegible] மாநில பொதுத் தொழிலாளர் சங்கத்தால் கொண்டாடப்பட்டது.

பவர்ஹவுஸ் வாயிலில் மாலை 6 மணிக்கு பகுதி செயலாளர் ராஜு துவக்கிவைத்து பேசினர்.

சென்னை மாநில பொதுத் தொழிலாளர் சங்கத்தின் உதவிச் செயலாளர் கண்ணன் தலைமை வகித்தார்.

இந்திய மாணவர் சங்கச் சார்பில் சந்துரு, அரசாங்கப் போக்குவரத்து ஊழியர் சங்க [illegible] விச் செயலாளர் சௌந்திரராஜன் ஆகியோர் பேசினர்.

சுற்றுலா பயணிகட்கு வழிகாட்டி நூல்

புதுடெல்லி, ஜூன் 6—"இந்திய பயண வழிகாட்டி நூல்" ஒன்றை தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த வெளியீடுகள் பிரிவு வெளியிட்டிருக்கிறது. இந்தப் பழம்பெரும் நாட்டின் முக்கிய இடங்கள் பற்றிய எல்லா விவரங்களையும் இந்நூல் வழங்குகிறது. வெளி நாட்டிலிருந்து வந்து சாவதானமாகவோ, அல்லது அவசர அவசரமாகவோ இந்தியாவை சுற்றிப் பார்க்க நினைக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு இப்புத்தகம் மிகுந்த உதவியாய் இருக்கும்.

நாட்டிலுள்ள சுற்றுலா மையங்களை கண்டுகளிக்கும் விருப்பமுடையவர்களுக்கும், அவ்விடங்களுக்கு கல்வி ரீதியில் பயணம் மேற்கொள்ள நினைப்பவர்களுக்கும் இந்த நூல் வழிகாட்டி உதவும். பயணத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் எளிதாக்கும் பொருட்டு விமான, கடல் மார்க்கங்கள், உள்நாட்டுப் போக்குவரத்து, அரசு விதிமுறைகள் முதலியவை பற்றிய தகவல்களும் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

கைரிக்ஷா அகற்றும் விழா

"அகற்ற வேண்டியவற்றை ஒழுங்காக அகற்றுவேன்": முதல்வர் கருணாநிதி உறுதி

சென்னை, ஜூன் 6—"அகற்றவேண்டியவற்றை ஒழுங்காக அகற்றுவேன்" என்று கைரிக்ஷாக்களை அகற்றும் விழாவில் முதல் அமைச்சர் கருணாநிதி உறுதி கூறினர்.

காட்டிக் கொடுப்பவர்கள் எவ்வெப்போது எங்கெங்கு தோன்றுவார்கள் என்பதை தம்மால் நன்ருகக் கண்டறியமுடியும் என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

முதல்வர் கருணாநிதியின் [illegible]து பிறந்த நாளை முன்[illegible]டு கைரிக்ஷாக்காரர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கும் விழா ராஜாஜி மண்டபத்திற்கு அருகே உள்ள மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்தோரை போக்குவரத்துத் துறை அமைச்சர் ராமச்சந்திரன் வரவேற்ருர்.

விழாவில் அமைச்சர்கள் சத்தியவாணி முத்து என். வி. நடராசன், ராசாராம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவுக்கு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் நெடுஞ்செழியன் தலைமை வகித்தார்.

சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கிவிட்டுப் பேசுகையில் கருணாநிதி கூறியதாவது:—

"தி மு கழக அரசு, அண்ணா தலைமையில் 1967ல் உருவான போது, சட்டப் பேரவையில் அண்ணா பேசியபோது இந்த அரசின் சட்டங்களாயினும், திட்டங்களாயினும், தமிழ்ச் சமுதாயத்தில் இருக்கிற ஏழை எளிய, பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட நடுத்தர மக்களுடைய வாழ்க்கையை மையமாக வைத்துத்தான் வகுக்கப்படும் என்று சொன்னார்.

அவருடைய வழி நின்று நடைபெறுகிற இந்த அரசு எந்தெந்த அளவுக்கு ஏழை மக்களுக்கு தன்னுடைய கடமையை பொறுப்புணர்ந்து ஆற்ற முடியுமோ அந்த வகையில் எல்லாம் ஆற்றிவருகிறது என்பதற்குள்ள எத்தனையோ சான்றுகளில் ஒன்றைத்தான் இன்றைக்கு நீங்கள் காண்கிறீர்கள்.

என்னுடைய பிறந்த நாள் விழாவை சமுதாயத்தின் அடித்தளத்து மக்களில் ஒரு பிரிவினருக்கு பயன்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டு அந்த அடிப்படையில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நான் கொண்டாடி வருகிறேன் என்பதையும், அதற்கு தமிழ்நாட்டில் உள்ள நல்ல எண்ணம் படைத்தவர்கள் வள்ள[illegible]மை வாய்ந்தவர்கள் வாரி வாரி வழங்குகிறார்கள் என்பதையும் தருகிறேன் என்று சொல்லி நிச்சயமாக தருகிறார்கள் என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அப்படிப்பட்டவர்கள் தந்த காணிக்கை, குவித்த நன்கொடை இவைகளை எல்லாம் வைத்துத்தான் கடந்த மூன்ருண்டு காலமாக பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களை அமைப்பதானாலும், கண்ணொளி வழங்கும் திட்டத்தை நிறைவேற்றுவதானாலும், கைரிக்ஷாக்களை அகற்றி அதற்குப் பதிலாக இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குகிற திட்டமானாலும், பொதுமக்களிடத்தில், வள்ளல் தன்மைவாய்ந்த வசதி படைத்த சிலரிடத்தில், நாம் கையேந்துகிருேம்.

இந்தக்கையில் நன்கொடை அளித்தால் அது ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிச்சயமாகப் பயன்படும் என்ற நம்பிக்கையோடு அவர்களும் நிறைய அள்ளித்தந்தார்கள்.

அந்த வகையில்தான் கடந்த ஆண்டுக்கு முதல் ஆண்டு தொழுநோயாய்ப் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கும் பணியில் நாம் ஈடுபட்டோம்.

அகற்றுகிற பணி

அது அகற்றுகிற பணிதான் அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிற வறுமையை அகற்றுவது மாத்திரமல்ல அவர்களுடைய உடலில் ஏற்பட்டிருக்கிற அந்தப் பயங்கரமான நோயை அகற்றுகிற அந்தப் பணியை நாம் முதலில் மேற்கொண்டோம்.

அடுத்தபடியாக கண்ணொளி வழங்குகிற திட்டமானாலும், அதிகம் வழங்குவது என்ற வார்த்தை இருந்தாலும், கண்ணில் வளர்ந்துவிட்ட சதையை ஏற்பட்டுவிட்ட நோயை அகற்றுகிற அந்தக் காரியத்தைத்தான் அந்தத் திட்டத்திலும் செய்தோம்.

இந்த சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்திலும், வழங்கும் திட்டம் என்று நாம் இதற்கு பெயர் வைத்து அழைத்தாலும், மனிதனை மனிதன் இழுக்கின்ற கொடுமை நிறைந்த காரியமாக விளங்குகிற அந்தக் கைரிக்ஷா கருவிகளை எல்லாம் அகற்றுகிற திட்டத்தைதான் இங்கே நாம் நிறைவேற்றவிருக்கிருேம்.

ஆகவே அகற்ற வேண்டியவைகளை அகற்ற வேண்டிய காலத்தில் அகற்ற வேண்டிய தருணத்தில் அகற்றினால் தான் அரசு நிலையானதாக இருக்கும். அரசு ஒழுங்கானதாக இருக்கும் என்பதை நான் இன்றைக்கு ஒரு சூளுரையாக எடுத்துக்கொள்கிறேன்.

"காட்டிக் கொடுப்பவன்"

அந்த வகையில்தான் மந்திரி நெடுஞ்செழியன் பேசியபோது ஏசுநாதரிடத்தில் இருந்த 12 மாணவர்களில் ஒருவன்—காட்டிக் கொடுப்பவனாக இருந்தான் என்று குறிப்பிட்டார். ஏசுநாதர் தாமதமாகக் கண்டுபிடித்தார். ஆகவே கஷ்டத்துக்கு ஆளானார்.

என்னைப் பொறுத்தவரையில் எவ்வெப்போது அப்படிப்பட்ட மாணவர்கள் எங்கெங்கே தோன்றுவார்கள் என்பதை நான் நன்ருகக் கண்டறிவேன்.

ஆகவே அகற்றவேண்டியவற்றை ஒழுங்காக அகற்றுவேன் என்ற உறுதியை—கைரிக்ஷாக்களை அகற்றுகிற இந்த நேரத்தில் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கருணாநிதி பேசினார்.

நெடுஞ்செழியன் பேச்சு

விழாவில் மந்திரி நெடுஞ்செழியன் பேசியதாவது:—

'இந்த ஆண்டு' முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாளில் சமுதாயத்தில் வாடிக்கொண்டிருந்தவர்களுக்கு வாழ்வளிக்க இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

'மனிதனை மனிதன் இழுக்கும்கொடுமை இருக்கலாமா? மாட்டுக்குப் பதிலாக மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமையும் இங்கே நடக்கலாமா? என்று மற்றவர்கள் கேள்வி கேட்டார்கள் பதில் தரவில்லை.

நாடகத்திலும்— திரைப் படத்திலும் அது போன்றவர்களைக் காட்டினால் அந்தக் காட்சிகளைக் கண்டு கண்ணீர் வடித்தார்களே தவிர அப்படிப்பட்டவர்களின் கண்ணீர் துடைக்கப்பட அந்த இழிவினை அகற்ற வேண்டும் அந்த முயற்சிகளைத் துணிவோடு மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கருணாநிதியைத் தவிர யாருக்கும் இல்லை.

இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் நடக்கும்போது பொறுமையைப் படுவோர் இருக்கத்தான் செய்வார்கள்.

நபிகள் நாயகத்தை சும்மாவா விட்டார்கள்? அவர் மக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்தார் என்ருலும் அவரை மக்காவிலிருந்து மதினாவரை துரத்தியடித்தார்கள்.

சாக்ரடீஸ் நல்லவற்றை எடுத்துச் சொன்னாலும் அவருக்கு விஷம் தராமல் இருந்தார்களா?

சமுதாயம்— அரசியல்— பொருளாதாரத் துறைகளில் எவ்வளவோ நன்மைகள் செய்தாலும் பொருமைப் படுகிருர்கள்.

ஏசுநாதரை அவரிடம் இருந்த 12 சீடர்களுள் ஒருவன் காட்டிக் கொடுத்தான். ஏசுவுக்கே அந்த கதி என்ருல் [illegible]மெல்லாம் எம்மாத்திரம்?

சமுதாயத்திற்கு நலம் பயக்கும் என்றுதான் இது போன்ற பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிருேம்.

சமுதாயநலனை பற்றுக்கோடாக வைத்து மக்கள் சமுதாயத்திற்கு மகிழ்ச்சி [illegible] காரியங்களை செய்துவருகிருேம்.

இவ்வாறு நெடுஞ்செழியன் பேசினார்.

310 பேருக்கு சைக்கிள்ரிக்ஷா

இந்த விழாவின்போது 310 பேர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கப்பட்டன.

முரசொலி கட்டுரை

எம். ஜி. ஆரை கொல்ல தூண்டியதாக புகார்: மாறன்மீது வழக்கு

சென்னை, ஜூன் 6—தி. மு. கழக எம். பி. யான மாறன்மீது சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அண்ணா தி. மு. கழக எம். பி. யான எஸ். டி. சோமசுந்தரம் வழக்கு போட்டிருக்கிருர்.

முரசொலி பத்திரிகையின் ஆசிரியரும், பிரசுரகர்த்தருமான மாறன், முரசொலி பத்திரிகையைச் சேர்ந்த [illegible] அடியார் ஆகியோர் மீது இந்த வழக்கு போடப்பட்டுள்ளது.

முரசொலி பத்திரிகையில் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையானது, அண்ணா தி. மு. க. தலைவரான எம். ஜி. ராமச்சந்திரனைக் கொலைசெய்யத் தூண்டும் வகையில் இருந்ததாக இந்த வழக்கில் புகார் கூறப்பட்டுள்ளது.

அந்தக் கட்டுரையை முரசொலி அடியார் எழுதியுள்ளதாகவும், "முரசொலி" நாளேட்டின் மே 25-ம் தேதி இதழில் பிரசுரமாகியுள்ள அக்கட்டுரையில் எம். ஜி. ஆர். "ஆனிவேர்" என்றும் அண்ணா தி. மு. க. முன்னணித் தலைவர்கள் "சல்லிவேர்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், பகிரங்கமாக வன்முறையைத் தூண்டும் வகையில் அக்கட்டுரை எழுதப்பட்டுள்ளதாகவும் சோமசுந்தரம் தமது புகாரில் கூறியிருக்கிருர்.

சோமசுந்தரம் சார்பில் கோர்ட்டில் வழக்குரைஞர் ஜி. கோபாலசாமி, வி. கோபிநாதன் ஆஜராயினர். வழக்கை விசாரணைக்கு ஏற்பதா இல்லையா என்பதை இன்று அறிவிப்பதாக மாஜிஸ்திரேட் [illegible] கூறினர்.

சினிமா கொட்டகை கட்ட ரூ. 25 லட்சம் கடனுதவி

சென்னை, ஜூன் 6—தமிழ்நாட்டிலும் — பெர்மனென்ட் சினிமா கொட்டகைகளைக் கட்டுவதற்கு இதுவரை 26 விண்ணப்பதாரர்களுக்கு தமிழ்நாடு தியேட்டர் கார்ப்பரேஷன் ரூ 25 லட்சத்து 70 ஆயிரம் வழங்கியுள்ளது.

இக் கார்ப்பரேஷனின் உதவியுடன் கட்டப்படும் முதல் இரண்டு சினிமா கொட்டகைகள் செப்டம்பர் மாத வாக்கில் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கார்ப்பரேஷன் கடனுதவி அளிப்பதுடன், சினிமா கொட்டகைகளைக் கட்டுவதற்கான டிசைன்களைக் குறைந்த கட்டணத்தில் அளிக்கிறது.

இக் கார்ப்பரேஷன் கடந்த ஆண்டு ஏப்ரலில் முதலமைச்சர் கருணாநிதி துவக்கிவைத்ததாகும்.

திராட்சை கண்காட்சி

புதுடெல்லி, ஜூன் 6—வடக்கு மண்டலத்துக்கான அனைத்திந்திய திராட்சைக் கண்காட்சி ஜூன் 12, 13-ம் தேதிகளில், அரியானாவிலுள்ள ஹிஸ்ஸார் என்னுமிடத்தில் நடைபெறும்.

தனியார், அரசாங்க திராட்சைத் தோட்டங்களில் விளைந்த புகழ் பெற்ற திராட்சை ரகங்களும், திராட்சை ரசம், திராட்சை ஊறுகாய், திராட்சை ஜல்லி போன்ற தயாரிப்புகளும் இந்தக் கண்காட்சியில் இடம் பெறும்.

சிறந்தது என தேர்ந்தெடுக்கப்படும் ரகங்களுக்கு பரிசுகளும், நற்சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இந்தியாவில் ஹெக்டேருககு கிட்டதட்ட 10 டன் அளவுக்கு திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. துகலிபோர்னியாவில் ஹெக்டேருக்கு சராசரியாகக் கிடைக்கும் விளைச்சலைவிட கூடுதலாகும்; திராட்சை அதிகமாக உற்பத்தி செய்யும் இத்தாலி, பிரான்சு, ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் ஹெக்டேருக்கு சராசரி உற்பத்தி இந்தியாவைவிட மிகக் குறைவாகவே உள்ளது.

ஆர். எஸ். எஸ். தலைவர் கோல்வால்கர் மரணம்

நாகபுரி, ஜூன் 6—ராஷ்டிரிய சுயம் சேவக் சங்க (ஆர். எஸ். எஸ்) தலைவர் எம். எஸ். கோல்வால்கர் நேற்றிரவு 9-5 மணிக்கு நாகபுரியில் காலமானார். அவருக்கு வயது 67.

கடந்த ஒருவார காலமாக அவர் மூச்சடைப்பினால் அவதிப்பட்டு வந்தார். பேசவோ சாப்பிடவும் முடியாமல் கஷ்டப்பட்டு வந்தார் என்று கூறப்படுகிறது.

2 வருஷங்களுக்கு முன்பு பம்பாயிலுள்ள டாடா நினைவு ஆஸ்பத்திரியில் அவருக்கு ஆபரேஷன் செய்யப்பட்டு, அவர் நல்லபடி இருந்து வந்தார். கடந்த நவம்பரில் தான் மூச்சு விடுவது சிரமமாக இருக்கிறது என்ருர்.

பின்னர் பிரபல ஆயுர்வேத நிபுணரான பண்டிட் ராம்நாராயண் சாஸ்திரி அவருக்கு வைத்தியம் செய்தார். அப்போது உடல்நிலை அபிவிருத்தி யடைந்தது.

சாதாரணமாக, கோடை காலத்தில் அவர் ஆர். எஸ். எஸ். கோடை முகாம்கள் சம்பந்தமாக நாடு பூராவிலும் சுற்றுப் பயணம் செய்வது வழக்கம். ஆனால் இந்த வருஷம் அதை ரத்துசெய்து விட்டு நாகபுரியில் சிகிச்சை பெற்று வந்தார்.

நாகபுரி ஆர். எஸ். எஸ். கிளை தலைவர் பாபுராவ் வராகத் பாண்டே, பாபா சாஹிப் படாடே, மற்றும் மத்திய நிர்வாகக்குழு உறுப்பினர் சிலரும் அவரது உயிர் பிரியும்போது உடனிருந்தனர்.

மகாராஷ்டிர முதன் மந்திரி வி. பி. நாயக் சென்ற வாரம் இங்குவந்து [illegible]ந்தபோது, கோல்வால்கரைப் பார்த்து உடல்நிலை பற்றி விசாரித்தார்.

கோவையில் இந்திராகாங்கிரஸ் தனித்து போட்டி?

புதுடெல்லி, ஜூன் 6—கோவை (மேற்கு) சட்டமன்றத் தொகுதிக்கு நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் என்று தெரிகிறது.

டெல்லிக்கு வந்திருக்கும் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வி. ராமையா, நேற்று பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசினர்.

திண்டுக்கல் லோகசபை இடைத் தேர்தலில் புது காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததற்கான பல்வேறு காரணங்களை அவர் அப்போது பிரதமரிடம் விளக்கியதாகத் தெரிகிறது.

அடுத்த மாதத்தில் நடக்கவிருக்கும் கோவை சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் புது காங்கிரஸ் எத்தகைய நிலையைப் பின்பற்றுவது என்பது பற்றியும் அவர்கள் பேசியதாக நம்பப்படுகிறது.

கோவை இடைத் தேர்தலில் புதுகாங்கிரஸ் பிற கட்சிகளுடன கூட்டு சேராமல் தனது சொந்த பலத்தில் போட்டியிடும் என்று தற்போது தோன்றுகிறது.

தமிழ்நாடு புது காங்கிரசின் மற்றொரு முக்கிய தலைவரான ஓ. வி. அளகேசன் பிரதமர் இந்திரா காந்தியை திங்கட்கிழமையன்று சந்தித்தார்.

கோவை இடைத் தேர்தலில் போட்டியிடுவது பற்றி முடிவு செய்ய இம்மாதம் 8ந் தேதி சென்னையில் தமிழ்நாடு புது காங்கிரஸ் நிர்வாக கமிட்டி கூடுகிறது.

டாக்சி-பஸ் மோதல்: 4 பேர் மரணம்

நாகர்கோயில், ஜூன் 6—ஆரல்வாய்மொழி அருகே டாக்சியும், அரசு பஸ்ஸும் மோதிக்கொண்டதில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உயிரிழந்தனர்.

ஆரல்வாய்மொழியைச் சேர்ந்த சொக்கலிங்கமும், அவருடைய மனைவி நாகலட்சுமி, அவர்களுடைய குழந்தை ஆனந்த், மற்றொரு பெண் ஆகியோர் இவ்வாறு இறந்தனர்.

நாகலட்சுமியின் தந்தை நாகர்கோயில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிருர். அவரைப் பார்த்து விட்டு அக்குடும்பத்தினர் நாகர்கோயிலிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது விபத்து நடந்தது.

கார் டிரைவர் உட்பட மற்றும் 4 பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சீன-ரஷியா போட்டியின் விளைவு

அமெரிக்க கோதுமை விலை உயர்வு

நியுயார்க், ஜூன் 6—[illegible] சீனா, ரஷியா ஆகியவை கோதுமைகோருவதால் அமெரிக்க மார்க்கெட்டில் கோதுமைவிலை தொடர்ந்து உயரும் என 'டௌ ஜோன்ஸ்' என்ற நிதித்துறை பத்திரிகை கூறியது.

ஏற்றுமதி கோரிக்கை பெருமளவில் காணப்படுகிறது சுமார் 20 கோடி புஷல் கோதுமைகளை இந்தியா கோருவதாகத் தோன்றுகிறது. 1972-73ல் வாங்கிய அளவுக்கு ரஷிய ரஷியா வாங்காது. அது சிறிதளவு வாங்கக்கூடும். கணிசமான அளவுக்கு சீனாவும் வாங்கக்கூடும். என தகவல்கள் கூறுகின்றன.

இப்பொழுது முடிந்த பருவத்தைவிட குறைவாகவே கனடா ஏற்றுமதி செய்ய முடியும். ரஷியாவுக்கு கோதுமை அனுப்பிய மேற்கு ஐரோப்பா இப்போழுது அனுப்பும் சாத்தியமில்லை என்று அப்பத்திரிகை கூறியது.

நெடுஞ்செழியன் திறந்துவைத்த

நரிக்குறவர் பள்ளியின் புதிய கட்டடம்

சென்னை, ஜூன் 6—சென்னை சைதாப்பேட்டையில் நரிக்குறவர் சமுதாயக் குழந்தைகளுக்காக திருவள்ளுவர் குருகுல பாடசாலை என்ற பெயரில் நடந்துவரும் பள்ளியில் ரூ 25 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதியை கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் நேற்று திறந்துவைத்தார்.

முதலமைச்சர் கருணாநிதியின் 50-வது பிறந்த நாள் விழாவை யொட்டி இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டது. விழாவுக்கு நரிக்குறவர் குலத்தவர் வேட்டி, சட்டை சேலை அணிந்து வந்திருந்தார்கள்.

விழாவில் கருணாநிதி சிறப்புரை ஆற்றினார். அவருக்கு நரிக்குறவர்கள் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன. சைக்கிள் ரிக்ஷா நிதிக்கு நிதியும் தரப்பட்டது.

நரிக்குறவர், குடுகுடுப்பைக்காரர், பூம்பூம் மாட்டுக்காரர் [illegible] சமூகத்தினர் ஆகியவர் சேர்ந்த 120 சிறுவர்கள் இப்பள்ளியில் படிக்கிருர்கள். உயர்ந்த வகுப்பு என்று [illegible] தப்படும் ஒருவகுப்பைச் சேர்ந்தவர் பள்ளியின் நிறுவனர். அவரது மனைவி ஒரு நரிக்குறத்தி. உயர்ந்தவகுப்பு என்று கருதப்படும் மற்றொரு வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்மணி சம்பளம் வாங்காமல் இதில் ஆசிரியர் பணி புரிகிருர். குடுகுடுப்பைக்காரர் வகுப்பைச் சேர்ந்த பழனி என்பவரும் இப்பள்ளி ஆசிரியர். இந்நால்வரின் பணியை முதல்வர் பாராட்டினர்.

விழாவுக்கு தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன் தலைமை வகித்தார். "நரிக்குறவர்" என்ற பெயரை மாற்றலாம் என்று யோசனை கூறினர்.

காலஞ்சென்ற அண்ணாதுரையின் உருவப் படத்தை முரசொலி மாறனும் முதலமைச்சர் கருணாநிதியின் உருவப்படத்தை அமைச்சர் சத்தியவாணி முத்துவும் திறந்துவைத்துப் பேசினர்கள்.

பூம்பூம் மாட்டுக்காரர்கள், குடுகுடுப்பைக்காரர்கள் போன்ற வகுப்பினரை ஆதிவாசிகள் பட்டியலில்சேர்த்து சலுகை வழங்கவேண்டும் என்று மத்திய அரசை சத்தியவாணிமுத்து கேட்டுக் கொண்டார்.

தி.மு.க.பிரமுகர் மரணம்

சென்னை, ஜூன் 6—திருவல்லிக்கேணி பகுதி திமுக பிரமுகரும், மாவட்ட திமுக உறுப்பினருமான பூ. அரங்கசாமி, நேற்று காலை ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் மரணம் அடைந்தார்.

அவர் உடல் நலமில்லாமல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். நேற்று காலை 5-30 மணிக்கு உயிர்நீத்தார். அவர் திமுகஆரம்பகாலமுதல் தீவிர தொண்டராக இருந்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றிருக்கிருர். நேற்று மாலை 6 மணிக்குகிருஷ்ணம்பேட்டை இடுகாட்டுக்கு அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

கேட்டால் உடனே விவாக ரத்து

புதுடெல்லி, ஜூன் 6—தம்பதியர் கேட்டால் உடனே விவாக ரத்துக்கு அனுமதியளிக்கும் மசோதா [illegible] ஒன்று [illegible] பாராளுமன்றத்தி[illegible]ப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்தத் தம்பதிகளுக்கு 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இருக்கக்கூடாது. அப்படிக் குழந்தைகள் இருந்தால் அவர்கள் மூன்று மாதம் பொறுத்திருக்கவேண்டும்.

வயது வந்தவர்கள் மனமொத்து ஒன்ருக இணைந்து வாழ்ந்தால், அதை திருமணம் செய்து கொண்டது போல் கருதவும் மசோதா வகை செய்கிறது.

நியூயார்க் பருத்தி மார்க்கெட்

நியூயார்க், ஜூன் 5—

ஆரம்ப விலை	53.80
முடிவு விலை	52.40

நடிகர் முத்துராமன்

தமிழ்ப் படங்கள் தோல்வி அடையக் காரணம் என்ன?

தமிழ்ப் படங்கள் தோல்வி அடையக் காரணம் என்ன? நியூ வேவ் என்றுல் என்ன? கதாநாயகன், கதாநாயகி குறையுடையவர்களாக சித்தரிக்கப்பட்டால் என்ன — என்ற கேள்விகளை எழுப்பி கட்டுரையில் சுவையான பதிலையும் எழுதியுள்ளார் நடிகர் முத்துராமன்.

தமிழ்ப் படங்கள் பெரும்பாலும் தோல்வியைத்தான் தழுவுகின்றன. தமிழ்ப்பட உலகம் படாதிபதிகளுக்கு லாபம் தரக்கூடியதாக இல்லை. இது பரவலாக இன்று எங்கும் பேசப்படுகின்ற ஒன்று. இந்தநிலை ஏன் தமிழ்ப் படங்களுக்கு ஏற்பட்டது? இதை யோசித்துப் பார்த்தால் ஒரு உண்மை புலப்படும். அது—

தமிழில் நல்ல கதையம்சம் கொண்ட, வழக்கத்திலிருந்து மாறுபட்ட கதைகள் அதிகம தயாரிப்பதில்லை, என்பது தான்.

'நியூ வேவ்' என்றுல் என்ன?

எத்தனை நாட்களுக்குத்தான் ரசிகர்கள் பார்த்த காட்சிகளையே உடைய படங்களைப் பார்த்துக்கொண்டு இருப்பார்கள்? பாறுதலின் காரணமாகத்தான் அண்மையில் தயாரான சில புதிய அலை படங்கள் பெரும் வெற்றியை தழுவின.

சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த நெஞ்சில் ஓர் ஆலயம் நியூவேவ் படமதான். நியூ வேவ் படம் என்றுடனேயே அதில் ஒன்றும் அப்படி ஆபாச காட்சிகள் இல்லையே என்று பலர் எண்ணக்கூடும். ஏனெனில் நியூவேவ் படங்கள் என்றுலேயே ஆபாசமான படங்கள் என்ற எண்ணம்தானே பலரிடம் பரவியுள்ளது. நியூவேவ் படங்கள் என்னு முத்திரையுடன் சில இந்திப் படங்கள் தமிழ் நாட்டில் வெளிவந்து வெற்றிக் கொடி நாட்டியதன் விளைவு இது. நியூவேவ் படங்கள் என்பது எந்த ஒரு கருத்தையும் புதுமையாக சற்று வித்தியாசமாக படைக்கப்படுவதுதான். அந்த வகையில் பார்த்தால் தமிழ்பட உலகிற்கு "நியூவேவ்" புதியதே அல்ல. நெஞ்சில் ஓர் ஆலயம் போன்று பல நியூவேவ் படங்கள் தமிழில் தயாராகி உள்ளன, ஆனால் அவைகளை 'நியூவேவ்' படங்கள் என்று பெயரிட்டு அழைக்காததின் விளைவாக நியூவேவ் படங்கள் ஏதோ வடநாட்டிலிருந்து வந்தது [illegible] பிரமையை பலர் இ[illegible] ஏற்றுவித்துள்ளார்கள்.

ஒரேமாதிரியான கதாபாத்திரங்கள்

வழக்கமான கதைகளிலிருந்து மாறுபட்டு [illegible]தி லி காரணங்களில் [illegible] படைக்கப்படும் எந்தப்படமும் வெற்றி பெறும் என்பது உறுதி அதற்கு "நியூவேவ்" என்ற பட்டம் கொடுத்தாலும் சரி, இல்லையென்றுலும் சரி. ஆனால் தமிழ்த் திரையுலகில் தயாராகும் படங்களில் அதிகமாக ஒரே மாதிரியான கதாபாத்திரங்களை உடைய கதாநாயகர்களையே சந்திக்கிறோம்.

ஆம் தமிழ்த்திரையுலகைப் பொறுத்த வரையில் தயாராகும் கதைகளில் பெரும்பாலான வற்றில் கதாநாயகன் குறைகளே இல்லாத தெய்வப் பிறவியாகத்தான் சித்தரிக்கப்படுகிறுன்.

உன்னதமான குணநலங்கள் கொண்ட கதாநாயகன், உத்தமமான கதாநாயகி, இவர்கள் வாழ்க்கையில் போராட்டங்களை ஏற்படுத்தவே பிறந்த வில்லன். இவர்களோடு கூடிய திரைப்படங்களை மக்கள் எவ்வளவு காலம் தான் பார்ப்பார்கள்?

கதாநாயகன் அல்லது நாயகியும் குறையுடையவர்களாக சித்தரிக்கப்பட்டால் என்ன? அப்போது தானே சுவையான பிரச்சினைகள் அதிகம் இருக்கும்.

மனநிறைவைத் தரும் பாத்திரங்கள்

அந்த வகையில் நான் இப்போது நடித்து வரும் பெரும்பாலான படங்கள் எனக்கு மனநிறைவைத் தருவதாக அமைந்துள்ளன.

வித்யா மூவிசாரின் "சூரிய காந்தி" படத்தில் த[illegible] விட தன் மனைவி அதி[illegible] பளம் பெறும் வேலையில் இருக்கிறுளே, தன்னைவிட வீட்டில் அதிக செல்வாக்கு உடையவளாக இருக்கிறுளே என்று எணணிப் பு[illegible]ம் தாழ் வுணர்ச்சி கொண்டவனாக நடிக்கிறேன்.

கதாநாயகனின் இந்த [illegible]ழ்வுணர்ச்சிதான் படத்தில் பிரச்னைகளை உருவாக்குகிறது. அமுதம் பிக்சர்ஸ் "சொந்தம்" படத்தில், முரட்டுத்தனமும், பிடிவாதமும் கொண்ட, படிப்பு வாசனை இல்லாத கிராமத்து வாலிபனாக நடிக்கிறேன். இத்தகைய குணங்கள் ஒருங்கே அமைந்ததினால் தன்னையே நேசிக்கும் மனைவியின் அன்பைப் புரிந்துகொள்ளாமல் தன்னை தன் மனைவி அவமதித்துவிட்டாள் என்று எண்ணி முதுமைக் காலம் வரை அவளோடு பேசாமலேயே கழிக்கும் முரடனாக இப்படத்தில் நான நடிக்கிறேன். இப்படத்திலும் கதாநாயகனின் குறைபாடுகளில்தான் கதையின் உயிரோட்டம் அடங்கியுள்ளது விசாலாட்சி கம்பைன்ஸி[illegible]

'தீர்க்க சுமங்கலி' படத்தில் முத்துராமன்.

'தீர்க்க சுமங்கலி' படத்தில் கண்டிப்பு, ஒழுக்கம் இவற்றையே குறிக்கோளாக கொண்ட குடும்பஸ்தனாக நடிக்கிறேன். இந்த கதாபாத்திரத்தின் குணங்களான கண்டிப்பும், ஒழுக்கமும் தான் அந்த குடும்[illegible]தையே சிதறடிக்கிறது. ஆகவே இந்தக் கதையில் கதாபாத்திரத்தின் குறைகள் தான், கதைக்கு உயிர் நாடியாக உள்ளன. கதையால் நம் முடைய[illegible] பாத்திரம் குறையுடையதாக இருந்தாலும் அதில் நடிக்கும் நம்மனதிற்கு நிறைவாக உள்ளது அல்லவா.

இது போன்ற மாறுதலான கதாபாத்திரங்களையுடைய படங்களை பார்க்கும் போது ரசிகர்களுக்கு மனநிறைவு ஏற்படும் என்பது உறுதி. இப்படிப்பட்ட மனநிறைவை ரசிகர்களுக்கும், நடிகர்களுக்கும் அளிக்கும் வகையில் படாதிபதிகள் படம் எடுக்க வேண்டும் என்று நான் கே[illegible] பதில் தவறில்லை அல்லவா?

சினிமாவில் நடிக்க வேண்டும் என்று தன்னிடம் சிபாரிசு கேட்டு வந்தவர்களைப் பற்றி குலுங்கக் குலுங்க சிரிக்க வைக்கும் வகையில்

நடிகை லட்சுமி

எழுதும் சுவையான கட்டுரை "நவமணி" இதழில் விரைவில் இடம்பெறும்

திரைஉலகம்

மாஸ்டர் ராமுவைக் கொல்ல அசோகன் உத்தரவு

சுவிட்சர்லாந்தில் சிகிச்சை செய்துகொள்ள தனி விமானத்தில் சிறுவன் ஒருவன்செல்கிறுன். விமானம் பழுதாகி ஒரு பாலைவனத்தில் விபத்துக்குளளாகிறது. விமானி இறந்துவிடுகிறுன்.

அந்தப் பெரிய பாலைவனத்தில் எட்டுவயதே நிறைந்த சிறுவன் தனது நாயுடன் அங்குமிங்கும்அலைந்து அவதிப்படுகிறுன்.

ஒரு நாள் இரவில் கொடிய விஷப்பாம்பு அவனைக் கடித்து விடுகிறது. அதனுல் அவன் கண்ணைப பறிகொடுத்து கடுந்துயருக்கு ஆளாகி தவிக்கும் நிலையில் கொடுந்தேள் ஒன்று அவனது காலில் கொட்டி விடுகிறது.

தாங்கமுடியாத வலியால் வேதனைப்பட்டுத் துடித்துக் கொண்டிருக்கும்போது காட்டுவாசிகள் சிலர் அவனை குகைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை செய்கின்றனர்.

நாட்கள் சில செல்லுகின்றன. அவன் பூரண குணமடைகின்றுன்.

அந்தச் சிறுவனுக்கு ஆகாரம் கொடுக்க எலிக்கறி சமைக்கின்றனர் காட்டுவாசிகள். எலியைச் சுடுவது சிறுவனின் கண்களுக்கு தனது உயிருக்குயிரான நாயைத் தீயில் வாட்டுவதைப்போல் தோன்றியது.

ஆத்திரம் அடைந்த அவன் சாப்பாட்டுத் தட்டை வீசி எறிந்து மண்ணை அள்ளி எல்லோர் மீதும் தூவ பெரியதாக ரகளை செய்கிறுன்.

காட்டுவாசிகளின் தலைவனுக்கு ஆத்திரம் வந்துவிடுகிறது. கடுங்கோபத்தோடு சிறுவனைக் கட்டிப்போட்டு மறுநாள் அவனைக் கொன்று விடும்படி உத்தரவிடுகிறுன்.

இக்காட்சி செந்தில்குமார் புரொடக்[illegible]ன்சாரின் 'பிள்ளைச்செல்[illegible]' வண்ணச் சித்திரத்திற்காக வாகினி ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டது.

சிறுவனாக மாஸ்டர் ராமுவும், காட்டுவாசிகள் தலைவனாக அசோகனும் மற்றும் சி. டி. ராஜகாந்தம், எஸ். வி. ராமதாஸ் முதலியோரும் நடித்தனர்.

மற்றும் ஜெய்சங்கர், நாகேஷ் எஸ். வி. ரங்கராவ், மேஜர், ஒ. ஏ. கே. தேவர் நாகையா, வி. எஸ். ராகவன், தேவிகா, குமாரி பத்மினி, மனோரமா, சுகுமாரி, சுந்தரிபாய் ஆகியோரும் நடிக்கின்றனர்.

திரைக் கதையை தயாரிப்பாளர் புரட்சிதாசனும் வசனத்தை வேல்முருகனும் பாடல்களைக்கண்ணதாசனும் எழுதியுள்ளனர். புதிய இசையமைப்பாளர் சக்தி குமார் இசையை கவனிக்கிறுர்.

வி. ராமச்சந்திரராவ் டைரக்ட் செய்கிறுர்.

'மங்கை' படத்தில் புதிய இசை அமைப்பாளர்

ஜெ ஸ்ரீ மூவிஸ் எனும் பட நிறுவனத்தின் முதல் தயாரிப்பான "மங்கை" பட துவக்க விழா நடைபெற்றது.

ஆரம்ப நாளன்று சுந்தரம் மாள் எழுதிய பாடலை பூரணி என்ற புதிய பின்னணி பாடகி பாடினுர். தேவன், பிரபாகரன் என்ற புதிய இரட்டையர் இசையமைத்தனர்.

"படத்தின் தயாரிப்பாளர் பி ஆனந்தன் கதையை எழுதியுள்ளார். காமு வசனம் எழுதுகிறுர்.

ஜெயானந்தம் படத்தை இயக்குகிறுர். ஜெமினி எல்லப்பா ஒளிப்பதிவு செய்கிறுர்.

சுரேஷ்பாபு, மலேசியா ஜெயராஜ், பி. டி. நாராயணன், பாண்டியன் முதலியோருடன் [illegible] பிரபல நடிகையரும் நடிக்கவிருக்கின்றன[illegible] அரசு ஸ்டூடியோவில் பட[illegible] உருவாக இருக்கிறது.

பொன்வண்டு படத்தில் பாரதி.

நெஞ்சுக்கு நீதி

ராஜா தியேட்டர்ஸ் தங்களுடைய முதல் தயாரிப்பாக "நெஞ்சுக்கு நீதி" படத்தை தயாரித்து வருகின்றனர்.

முக்கியமான பாத்திரத்தில் ஜெயந்தி நடிக்கிறுர்.

திரைக்கதை எழுதி எல்பின் சிவராஜ் டைரக்ட் செய்கிறுர் எம். எஸ். மாறன் வசனம் எழுதுகிறுர். சத்தியம் இசையமைக்கிறுர்.

இன்றைய சினிமா

சென்னை

கபாலி	வந்தாளே மகராசி
காமதேனு	மகாதேவி
சரஸ்	Chitty Chitty Bang Bang
நியூ எலிபின்ஸ்டன்	
	செம்பருத்தி (மலையாளம்)
நேஷனல் டாக்கீஸ்	நல்லவன் வாழ்வான்
ரசம்	துளசி மகிமை
தாம்பரம்	
எம். ஆர். தியேட்டர்	சபதம்
ஸ்ரீ சித்ரா	திருடாதே
நேஷனல்	காசி யாத்திரை
குரோம்பேட்டை	
வெற்றி	குலேபகாவலி
வில்லிவாக்கம்	
ராயல்	உலகம் சுற்றும் வாலிபன்

பின்னணிபாடகர் சௌந்தரராஜன் தென் ஆப்ரிக்கா பயணம்

தென் ஆப்ரிக்காவில் டர்பன்நகர் பிங்கோ ஆர்ட்சின் அழைப்பை ஏற்று திரைப்பட பின்னணிப் பாடகர் டி. எம். சௌந்தரராஜன் தென்னுப்பிரிக்காவிற்கு இம்மாதம் 2-ம் தேதி சென்றுள்ளார்.

சௌந்தரராஜன் தமது குழுவினர் 9 [illegible]ருடன் தென் ஆப்பிரிக்காவில் பல பகுதிகளில் [illegible] மாதம் முழுதும் இசை நிகழ்ச்சிகளை நடத்துகிறுர்: ஜூலை முதல் வாரத்தில் சென்னை திரும்புகிறுர்.

இதன் மூலம் பெறும் ஊதியம் [illegible] முருகன் கோயில் கட்டுவதற்கும், கண் மருத்துவமனை, தொழு நோய் வைத்திய நிலையம் கட்டுவதற்கு வழங்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அசோகனின் புதிய நாடகம்

அசோகன் நாடக மன்றத்தினர் கனி கொடுத்த வள்ளல் என்ற பெயரில் புதிய சரித்திர நாடகம் ஒன்றை உருவாக்கி வருகின்றனர்.

ஜூலை மாதம் அரங்கேற இருக்கும் இந்த நாடகத்தில் எஸ். ஏ. அசோகன், கே. கே. சௌந்தர், சீதாராமன், சந்திரபாபு, வி. ஆர். திலகம், கோவை காமாட்சி, ராஜம் ஆகியோர் நடிக்கின்றனர்.

[illegible] கதை வசனம் எழுதியுள்ளார்

Printed by S. V. G. Sowrirajulu at the M. G. P. P. S. Press, No. 4, South Bank Road, Madras-28 and Printing Published by him for the Madras Co-operative, and Publishing Society Ltd.
Chief Editor: S. V. G. Sowrirajulu,
Honorary Editor: N. Muth[illegible]marasamy

காசியாத்திரை

—: விமர்சனம் :—

எல்லோரும் பிரம்மச்சாரியாக இருக்கவேண்டுமென்று கட்டுப்படுத்தும் கட்டை பிரம்மச்சாரி! எப்படியாவது திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று துடிக்கும் இளங் காதலர்கள்! தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள காதலர்கள் பிரம்மச்சாரிக்கு சபலம் ஏற்படும்படி செய்கின்றனர். அதனுல் ஏற்படும் சிக்கல் எல்லோரையும் திண்டாட வைக்கிறது.

நகைச் சுவைப் படத்திற்கேற்ற கதையை அமைத்து சிரித்து மகிழும் வகையில சுவையாக வசனம் எழுதியுள்ளார் குகநாதன்.

தமிழ்த்திரையுலகில் உள்ள பெரும்பாலான நகைச்சுவை நடிகர்கள் இந்தப் படத்தில் உள்ளனர்.

ராமு, சீதாவின் காதலை நிறைவேற்றிவைக்க பிரம்மசாரியின் பிரதம சீடராக மாறுகின்ற சங்கர் பாத்திரத்தில் சுருளிராஜன் அனாயாசமாக நடித்துள்ளார். ராமாயணத்தைப் படித்தபடி ராமுவை வெளியே அனுப்புகின்ற கட்டத்திலும், சுவையற்ற சாப்பாட்டைப் பறிமாறிவிட்டு பிரம்மச்சரியத்துக்கு அது நல்லதுஎன்றுஅவர் சமாளிக்கும் காட்சியிலும் நன்ருக நடித்துள்ளார்.

பாட்டியைப் பிரியாத சொக்கலிங்கம் பாத்திரத்தில் சோ சிறப்பாக நடித்துள்ளார். தள்ளாடியபடி அவர் கூறும் வார்த்தைகள் தாராளமாக சிரிக்க உதவுகின்றன.

காதலித்துவிட்டு சித்தப்பா சொல்லை எப்படி மீறுவது என்று தவியாய்த் தவிக்கும் போதும், நாடகத்தில் கல்லடி பட்டதுடன் மட்டுமின்றி படுதாவுடன் சேர்த்து சுருட்டப்பட்டு பரிதாபமாகத் தொங்கும்போதும் ஸ்ரீகாந்த் ரசிக்கத்தக்க வகையில் நடித்துள்ளார்.

புரோகிதர் வேடத்தில் வாழைப்பழத்தைத் தின்றுவிட்டு, விரலை சூப்பியபடி திரு திரு வென்று ஸ்ரீகாந்த் விழிக்கும் கட்டம் அருமை.

வி. கே. ராமசாமி பிரம்மச்சாரி வேடத்தில் கச்சிதமாக நடித்துள்ளார்.

நாடக நடிகையாகவும், அரைக் கிறுக்காகவும் வருகின்ற [illegible] மனோரமா அமர்க்களமாக [illegible]டித்திருக்கிறுர். அவரது அனுபவ முத்திரைகள் பல இடங்களில் சுவைகூட்டுகின்றன. ஜெயாவிற்கும், பத்மினிக்கும் போதிய சந்தர்ப்பமில்லைஎன்றபோதிலும் குறையின்றி நடித்துள்ளனர்.

எம். ஆர். ஆர். வாசு, தேங்காய் சீனிவாசன், ஐ. எஸ். ஆர் ராமாராவ், காந்திமதி ஆகியோர் திறம்பட நடித்துள்ள[illegible]

தேவையற்ற கட்டங்கள் இல்லாமல், விறுவிறுப்பாக ரசிக்கத் தக்க வகையில் படத்தை எஸ். பி. முத்துராமன் இயக்கியுள்ளார்.

வாலி, பஞ்சு அருணுசலம் பாடல்களுக்கு சங்கர்—கணேஷ் இசையமைத்துள்ளனர்.

பாபு ஒளிப்பதிவு செய்திருக்கிறுர்.

மொத்தத்தில்—காசி யாத்திரை படம் சிரித்து களிக்கத் தக்க நகைச்சுவை விருந்து.

சிவாஜிக்கு காமராஜ் பாராட்டு

"நாட்டுக்குத் துரோகம் செய்யக்கூடாது என்ற லட்சியத்தையும் கடமைஉணர்ச்சியையும் வலியுறுத்தும் உயரிய நாடகமான "தங்கப்பதக்கம்" நாடகத்தைநடத்தும் சிவாஜி கணேசனைபாராட்டுகிறேன்" என்று பழைய காங்கிரஸ் தலைவர் காமராஜர் கூறினுர்.

"சிந்தனை" வார இதழ் வளர்ச்சி நிதிக்காக நேற்று மியூசிக் அகடமியில் நடைபெற்ற 'தங்கப்பதக்கம்' நாடகத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது:

இந்த நாடகத்தை பல முறை நான் பார்த்திருக்கிறேன். தமிழமெங்கும் தங்கப்பதக்கம் நாடகத்தை நடிகர் திலகம் நடத்தியிருக்கிறுர், என்றுலும் நாம் எத்தனை முறை பார்த்தாலும் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் வகையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் அருமையான நடிப்பு இருக்கிறது.

நடிப்புத் திறமை மட்டுமின்றி நல்ல அறிவுரைகளும், கருத்துக்களும் உள்ள நாடகம் தங்கப்பதக்கம்.

பத்திரிகை நடத்தி பணத்தையெல்லாம் இழந்த க. பா. பழனிக்கு உதவிசெய்வதற்காக—நல்ல காரியத்திற்காக கடமை உணர்வோடு இந்த நாடகத்தை நடத்திக் கொடுப்பதற்கு சிவாஜி கணேசனுக்கு என் பாராட்டுகளையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றுர்.

சிவாஜி கணேசன் பேசுகையில்:—

நாடகம் சினிமா போன்றவற்றை அதிகம் பார்க்காதவர் தலைவர், பார்க்கக் கூடாது என்பதல்ல; இதற்கெல்லாம் அவருக்கு நேரமில்லை "பெருந் தலைவர் நாடகத்திற்கு வந்து ஆசி வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்றுர்.

"சிந்தனை" பத்திரிகை ஆசிரியர் க. பா. பழனி அனைவரையும் வரவேற்றுர்.

அள்ளிடவா

"பாடலைகளை சொல்லிடவா
பார்வையிலே அள்ளிடவா
என் மயக்கம் உன் மயக்கம்
தெய்வீக சுகம் அல்லவா
தேன் உண்ணவா
புதுராகம் உருவாகும் உறவாடு
எந்தன் ஆருயிரே
பதமாக விளையாடு
மனமுண்டு"

கவிஞர் நாயகம் எழுதிய இப்பாடலுக்கு சங்கர் கணேஷ் இசை அமைத்தனர். டி. எம். சௌந்தரராஜன், பி. சுசீலா குரல் கொடுத்தனர்.

கதிர்வேல் முருகன் பிலிம்ஸ் வாக்குறுதி படத்திற்காக சாரதாவில் இப்பாடல் ஒலிப்பதிவானது.

வரப்பெற்ரேம்

திரையுலகச் செய்திகளைத் தாங்கி கே. பி. சுப்பிரமணியை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "பிலிம் நியூஸ்" இதழ் வரப்பெற்ரேம்.

விலை 15 காசு

"உலகம் சுற்றும் வாலிபன்" சிறப்பு மலராக வெளிவந்துள்ள "துரிதத் தந்தி" இதழ் வெளிவந்துள்ளது.

விலை 70 காசு